# 13. வங்கித் தொழிலும் நிதியும்

வங்கித் தொழில்துறை தொடர்ந்து விரிவடைந்தது. அதிகரித்த போட்டித்தன்மையானது வங்கிகள் அவற்றினது வாடிக்கையாளர்களுக்கும் பெருமளவு வசதிகளை வழங்குவதற்கு நிர்ப்பந்தித்தது.

▲ வைப்புக்களைத் திரட்டல் வர்த்தக வங்கிகளினாலும் (14 சதவீதம்) தேசிய சேமிப்பு வங்கியினாலும் (13 சதவீதம்) திரட்டப்பட்ட வைப்புக்கள் மேலும் விரிவடைந்தன. வட்டி வீதங் களில் ஏற்பட்ட உயர்வின் காரணமாக உண்மை வட்டி வீதங்கள் ஆண்டின் இறுதிப்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமையானது சேமிப்புக்களை ஊக்குவிப்பதாக இருந்தது.

## வெளிநாட்டு நாணய வைப்புக்கள்

▲ தற்பொழுது நான்கு வெளிநாட்டு நாணய வைப்புக்கள் திட்டம் தொழிற் பாட்டிலுள்ளன. வதியாதோர் வெளி நாட்டு நாணய வைப்புக்கள் கணக்குத் திட்டம் 1978இல் அறிமுகப்படுத் தப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து ஏனைய மூன்று வைப்புத் திட்டங் களான இலங்கையரல்லாதோர் வெளி நாட்டு நாணயக் கணக்குகள் (1980), வதிவுடையோர் வெளிநாட்டு நாணய வைப்புத் திட்டம் (1991), ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் திட்டம் (1994) என்பன அறிமுகப் படுத்தப்பட்டன.

▲ உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவு களிலுள்ள மொத்த வெளிநாட்டு நாணய வைப்புக்கள் 2000ஆம் ஆண்டு திசெம்பரில் ஐ.அ.டொலர் 1,074 மில்லியனாகக் காணப்பட்டன.

▲ 2000ஆம் ஆண்டில் பன்னாட்டுச் சந்தைகளில் வட்டி வீதங்களில் ஏற் பட்ட அதிகரிப்புக்களைத் தொடர்ந்து, வைப்பாளர்களுக்கு கவர்ச்சிகரமான வட்டி வீதங்களை வழங்கும் பொருட்டு 2000ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் வர்த்தக வங்கிகள் வெளி நாட்டு நாணய வைப்புக்கள் மீதான அவற்றின் வட்டிவீதங்களை மேல் நோக்கிச் சீர்செய்தன.

## வங்கித் தொழில் வசதிகள்

▲ நாட்டில் தொழிற்படுகின்ற வங்கிகள் விரிவடைந்தமையின் காரணமாக வங்கித் தொழில் செறிவு அதாவது

### வெளிநாட்டு நாணய வைப்பு வீதங்கள் (%)

| மாதம்/ ஆண்டு | சேமிப்பு வைப்பு வீதங்கள் | | நிலையான வைப்பு வீதங்கள் 1 ஆண்டு | | ஐ.அ. பெடரல் நிதிய வீதம் | இலசிவ வீதம் 6 மாதம் |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ. | டொ | ஐ.அ. | டொ | | ஐ.அ. டொ |
| 1999 திசெம்பர் | 2.50 | 5.25 | 5.00 | 6.13 | 5.50 | 6.13 |
| 2000 சனவரி | 2.50 | 5.25 | 5.00 | 6.00 | 5.50 | 6.00 |
| பெப்புருவரி | 2.50 | 5.50 | 5.00 | 6.18 | 5.75 | 6.29 |
| மாச்சு | 2.50 | 5.50 | 5.00 | 6.15 | 6.00 | 6.33 |
| ஏப்பிறல் | 2.50 | 5.50 | 5.00 | 6.40 | 6.50 | 6.53 |
| மே | 2.50 | 5.50 | 5.00 | 6.34 | 6.50 | 7.11 |
| யூன் | 2.50 | 5.70 | 5.00 | 6.50 | 6.50 | 7.00 |
| நவெம்பர் | 2.50 | 5.75 | 6.00 | 6.75 | 6.50 | 6.64 |
| திசெம்பர் | 2.50 | 5.90 | 6.00 | 6.90 | 6.50 | 6.20 |
| 2001 சனவரி | 2.50 | 6.25 | 5.75 | 7.00 | 6.00 | 5.48 |

அட்டவணை 13.1

மூலங்கள்: இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அட்டன் நசனல் வங்கி, வரையறுக்கப்பட்ட கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பரேசன், சம்பத் வங்கி, செலான் வங்கி

ஒவ்வொரு 10,000 மக்களுக்குமான வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை இப்பொழுது 0.56 ஆகக் காணப்படுகின்றது. வர்த்தக வங்கிகள் அவற்றின் நடவடிக்கைகளின் தன்னியக்கப்படுத்தலை அதிகரித்தமை மற்றும் வாடிக்கையாளர்களுக்கு கூடுதலான வசதிகளை வழங்கியமை என்பனவற்றின் காரணமாக அவ்வங்கிகளின் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் வலையமைப்பு விரிவடைந்தது.

- ▲ வாடிக்கையாளர்களுக்கு பெரும் வசதியாகவுள்ள கொடுகடன் அட்டைகளின் பயன்பாடு அதிகரித்து வருகின்றது.
- ▲ தற்பொழுது பல உள்நாட்டு வர்த்தக வங்கிகளும் வெளிநாட்டு வர்த்தக வங்கிகளும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பயன்படுத்தக்கூடிய கொடுகடன் அட்டைகளை வழங்குகின்றன.

## வர்த்தகப் பத்திரம்

- ▲ வர்த்தகப் பத்திரங்கள் கம்பனிகளுக்கான குறிப்பிடத்தக்க நிதி மூலமாக மாற்றம் பெற்றிருப்பதுடன் அண்மைய கடந்த காலத்தில் பிரபல்யம் பெற்றனவாகவுமுள்ளன.

## கிராமிய வருமானத்தை உயர்த்துதல்

- ▲ கிராமியத் துறையில் வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை அதிகரிப்பதற்காக கடந்த சில ஆண்டுகளில் பல கொள்கை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ▲ மக்களை அடிப்படையாகக் கொண்ட நுண்பாக நிதியியல் அமைப்புக்களை ஊக்குவித்தல், சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் மற்றும் இசுறு அபிவிருத்திச் சங்கங்கள்.
- ▲ அபிவிருத்தி வங்கிகள் மற்றும் சேமிப்பு வங்கிகளை நிறுவுவதற்குத் தனியார் துறையை ஊக்குவித்தல், சனச அபிவிருத்தி மற்றும் சேமிப்பு வங்கி, பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி மற்றும் சிலிங்கோ அபிவிருத்தி வங்கி.

### வங்கித் தொழில் வசதிகள்

| | 1997 | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|---|
| ஒவ்வொரு 10000 ஆட்களுக்கும் வர்த்தக வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை | 0.54 | 0.55 | 0.55 | 0..56 |
| தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் | 197 | 270 | 316 | 355 |
| கொடுகடன் அட்டை | 52,882 | 85,964 | 161,079 | 205,297 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 13.2

### வர்த்தகப் பத்திரம்

(ரூபா மில்லியன்)

| | 1997 | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|---|
| மொத்த வழங்கல் | 11,240 | 16,557 | 16,203 | 14,145 |
| வெளிநின்றவை | 3,517 | 4,386 | 5,056 | 3,963 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 13.3

- ▲ மாவட்ட அடிப்படையிலான பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளை மாகாண மட்டத்தில் பிரதேச அபிவிருத்தி வங்கிகளாக மீளமைப்புச் செய்தல்.
- ▲ வேளாண்மை உற்பத்திகளின் விலைகளை உறுதிப்படுத்துவதற்காக "முன் விற்பனை ஒப்பந்த முறை" ஏற்படுத்தப்பட்டது.
- ▲ வட்டி உதவுதொகைகளை வழங்குவதன் மூலம் கிராமியத் துறைக்கான கொடுகடன் வசதிகளை அதிகரிப்பதனை மேலும் ஊக்குவித்தல்.

## கொடுகடன் வசதிகள்

▲ ***புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்.***

இது நெல் மற்றும் ஏனைய துணையுணவுப் பயிர்களுக்கான குறுங்காலப் பயிர்ச் செய்கைக் கடன்களை வழங்கும் நாடளாவிய திட்டமொன்றாகும். அரசினால், வட்டி உதவு தொகையொன்று வழங்கப்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.294 மில்லியன் கொண்ட தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது.

▲ ***இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்***

இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் தொழிற்படுவதுடன், இது கொடுகடன் வசதிகள் மற்றும் உதவிப் பணிகளை வழங்குவதன் மூலம் நிரந்தரப் பயிர்த்துறையின் அபிவிருத்தி மற்றும் வர்த்தக மயமாக்குதல் ஆகியவற்றுக்கு உதவியளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

▲ ***சுரதுற திட்டம்***

நுண்பாக – தொழில் முயற்சிக் கொடுகடன் (சுரதுற திட்டம்) ஊடாக சுய தொழில் வாய்ப்பை ஊக்குவிக்கும் இத் திட்டம் வேலையற்ற இளைஞர்களுக்கிடையில் சுய தொழில் வாய்ப்பை ஊக்குவித்தல் வாயிலாக அவர்களின்

## தொழிற்பாட்டிலுள்ள ஏனைய கொடுகடன் திட்டங்கள்

| கொடுகடன் திட்டம் | பணித்திட்டங்கள் |
|---|---|
| சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் | செலவுச் சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாகக் கடன் வழங்கல் முறையினைக் கணிப்பதன்மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் சேமிப்புப் பழக்கத்தை மேம்படுத்தலும். |
| கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (சுழலும் நிதி) செயற்றிட்டம் | வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை அதிகரித்தல். |
| தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் | சிறு தேயிலை உடைமையாளர்களின் வருமானத்தினை உறுதியான அடிப்படையில் உயர்த்தலும் செயற்றிட்டப் பிரதேசத்தின் இயற்கைச் சூழலை மேம்படுத்தலும். |
| தென்மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவது. |
| வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்தி செயற்றிட்டம் | செயற்றிட்டப் பிரதேசத்தில் வாழும் மக்களின் பொருளாதார சமூக மற்றும் ஊட்டச்சத்தை நல்ல நிலையில் வைத்திருத்தல். |
| வடமத்திய மாகாணம்: பங்கேற்பு கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் | குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கான வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு ஊட்டச்த்தினை மேம்படுத்தல் மற்றும் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல். |
| உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டுக் கொடுகடன் திட்டம் | நாட்டின் உணவு உற்பத்தியையும் உணவு பதனிடல் தொழில் நுட்பத்தினையும் மேம்படுத்தல். |
| தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டம் | உயர்ந்த தகைமைபெற்ற தொழிற்படையை உருவாக்குவதற்காக தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் தரத்தினையும் தேர்ச்சியினையும் மேம்படுத்தல் |
| யப்பான் யூ.கோ. நுண்பாக நிதிச் செயற்றிட்டம் | செலவுச் சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாக கடன் வழங்கல் முறையினை நிறுவுவதன்மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் சேமிப்புப் பழக்கத்தினை மேம்படுத்தலும். |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வருமானத்தை அதிகரிக்கவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் மூன்று கடன் வழங்கும் நிறுவனங்களின் பங்களிப்புடன் தொழிற்படும் திட்டமொன்றாக் காணப்படுகின்றது. 1998இல் தொடங்கப்பட்ட இச் செயற்றிட்டத்தின் கட்டம் II இன்கீழ் ரூ.907 மில்லியன்கொண்ட கடன்கள் 2000ஆம் ஆண்டு இறுதிவரையும் வழங்கப்பட்டன.

## ஊழியர் சேம நிதியம்

- ▲ ஊழியர் சேம நிதியத்தினால் பெறப்பட்ட மொத்த உதவுதொகைகள் குறிப்பிடத்தக்க விரிவொன்றைப் பதிவு செய்தன. நிலுவைகளையும் உள்ளடக்கிய மொத்த உதவுதொகைகள் 1999இன் 14 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 24 சதவீதத்தால் அதிகரித்தன. நிதியத்துக்கு உதவு தொகை வழங்கும் தொழில் தருநர்களின் எண்ணிக்கை 2%இனால் அதிகரித்தது.
- ▲ ஊழியர் சேம நிதியத்தின் மொத்த முதலீடுகள் 1999இறுதியின் ரூ.186 பில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ரூ.215 பில்லியனுக்கு அதிகரித்தன.
- ▲ ஊழியர் சேம நிதியத்தின் மொத்த மீளளிப்புக்கள் இவ்வாண்டில் ரூ.11 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 37 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தன.

## ஊழியர் நம்பிக்கை நிதியம்

- ▲ நிதியமைச்சின்கீழ் தொழிற்படும் ஊழியர் நம்பிக்கை நிதியமானது தொழில் தருநரினால் உதவுதொகை வழங்கப்படும் நிதியமொன்றாகும். ஊழியர் நம்பிக்கை நிதியம் பங்கு போன்ற தனியார்துறைக் கருவியொன்றில் முதலீடு செய்யலாம்.
- ▲ 2000ஆம் ஆண்டின் இறுதியில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்த முதலீடுகள் ரூ.29 பில்லியனாகக் காணப்பட்டிருந்தன. எல்லாமாக 35,280 தொழில் தருநர்கள் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு உதவுதொகை வழங்குகின்றனர்.

## பங்குச் சந்தை

- ▲ பங்குச் சந்தை நடவடிக்கைகள் 2000 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக மந்தமடைந்திருந்தன. பட்டியலிடப் பட்ட பல கம்பனிகளில் ஆரோக்கிய மான வருவாய்கள் பதிவுசெய்யப்பட்ட போதிலும் அதிகரித்த இன நெருக்கடிகள் காரணமாக ஏற்பட்ட நிலையற்ற தன்மை, திரவத்தன்மைப் பற்றாக்குறை மற்றும் வெளிநாட்டுப் பங்கேற்பில் காணப்பட்ட குறைவு ஆகியனவே பங்குச் சந்தை நடவடிக்கைகளில் காணப்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சிக்குப் பொறுப்பான முக்கிய காரணங்களாகக் காணப்பட்டன.
- ▲ பங்குச் சுட்டெண்கள் மற்றும் சந்தைப் புரள்வு ஆகிய இரண்டிலும் வீழ்ச்சியடையும் போக்கொன்று அவதானிக்கப்பட்டது.
- ▲ பங்குச் சந்தையானது 2001ஆம் ஆண்டில் மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஏற்கெனவே தேறிய வாங்குநர்களாகக் காணப்பட்டனர்.